# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம் (கூட்டிணைத்தல்)

**மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எட்வட் குணசேகர அவர்களால் 2016, மே மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[*103 ஆம் சட்டமூலம்*]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2 -PL 009912-225 (2016/05)

### மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம் (கூட்டிணைத்தல்)

## மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் மீரிகம மினிஒழுவவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*மட்டுப்படுத்தப் பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூகசேவைகள் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''மட்டுப்படுத்தப்பட்ட ஸ்ரீ வித்யாவாச சமூக சேவைகள் சங்கம்'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன்

2 -PL 009874-300 (2016/04)

அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) புத்தசாசனத்தைப் பரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஆ) புத்த மத பாடசாலைகளை நிறுவுதலும் பராமரித்தலும் அவற்றுக்கு உதவி வழங்குதலும் ;

(இ) அநாதைப் பிள்ளைகளின் மேம்பாடு கருதி அவர்களுக்கு உதவிகளை வழங்குதலும் அவர்களுக்கென்று நிலையங்களை அமைத்துப் பராமரித்தலும் ;

(ஈ) சமூக நலனோம்பு, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு அவற்றைச் செயற்படுத்துவதில் ஈடுபடுதல் ;

(உ) கல்வி மற்றும் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தலும் அவற்றைப் பரவலாக்கிப் பரப்புவதற்காக கல்வி உதவிப் பணம், புலமைப்பரிசில்கள், நன்கொடைகள், நிதி உதவி அத்துடன் ஏனைய உதவிகளையும் செய்தல் ;

(ஊ) ஏதேனும் கைத்தொழில் அல்லது வியாபாரத்தில் அல்லது ஏதேனும் ஏற்றுமதி, இறக்குமதி பௌத்த தத்துவங்களையும் வாழ்க்கை முறையையும் பேணிப் பாதுகாத்தலும் பரப்புதலும் ;

(எ) இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஏனைய பௌத்த அமைப்புக்களுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் ;

(ஏ) சூழல் பாதுகாப்பு மற்றும் பேணிப் பாதுகாப்பளித்தல் போன்றவற்றுக்காகக் கருத்திட்டங்களை ஆரம்பித்துப் பராமரித்தல் ;

(ஐ) நூல்நிலைய சேவையொன்றைத் தாபித்துப் பராமரித்தல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக்கொண்ட ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயற்படுதலும் இணைதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக இலங்கையிலும் வேறெங்கேயும் மாநாடுகள் கருத்தரங்குகள், வேலைக்களங்கள், குழுக்கற்கைகள், விரிவுரைகள் போன்றவற்றை நடாத்துவதற்கு ஆதரவு வழங்குதலும் கொண்டு நடாத்துதலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் ஏற்றவையெனக் கூட்டுத்தாபனம் கருதும் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், துண்டுப்பிரசுரங்கள், செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ; அத்துடன்

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை எய்துவதற்குத் தேவையானதும் இடைநேர்விளைவானதும் விரும்பத்தக்கதுமான வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத் திலான சட்டத்துக்கும் அமைய கூட்டுத்தாபனம் பின்வருவனவற் றுக்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படும் காணிகள் அல்லது கட்டிடங்களை கொள்வனை செய்தலும், வாடகைக்குக் கொடுப்பதற்கோ அல்லது குத்தகைக்கு எடுப்பதிலும் அல்லது வேறுவகையில் கொள்ளுதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஆற்றுவதற்காக வட்டியுடன் அல்லது வட்டியின்றி பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ;

(இ) நாணயமாற்றுண்டியல்களையும் காசோலைகளையும் வாக்குறுதிப்பத்திரங்களையும் ஏனைய கைமாற்றத்தகு சாதனங்களையும் ஆக்குதலும் வரைதலும் ஏற்றுக் கொள்ளுதலும் கழிப்பனவு செய்தலும் புறக் குறிப்பிடுதலும், கொள்வனை செய்தலும், விற்றலும், வழங்குதலும், வங்கிக்கணக்குளைத் திறத்தலும், செயற்படுத்தலும், மூடுதலும் :

(ஈ) கூட்டுத்தாபனத்தின் கருமங்களை ஆற்றுவதற்கு உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளைச் சபை பொருத்தமெனக் கருதும்வகையில் முதலீடு செய்தல் ;

(உ) ஒப்பப்பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடை கள் அத்துடன் எத்தகையதுமான கொடைகள் என்ப வற்றைப் பரிந்துகேட்டலும் பெறுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக எவரேனும் ஆளுடன் அல்லது ஏதேனும் கம்பெனி யுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல் ;

(எ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்கள் சம்பந்தப்பட்ட எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்புகளையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளுதல், நிறைவேற்றுதல், புரிதல் அத்துடன் நிறுவகித்தல் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும், கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான அதத்கைய சம்பளங்களையும் பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையும் முறையாகவும் பயனுறவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது உசிதமான வேறெல்லாக் கருமங்களையும் காரியங்களையும் செய்தல்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும், அதன் அதிகாரங்களும்.

**5**. (1) சங்கத்துக்குரித்தான நிதி மற்றும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் யாவும் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பு ஆதனம், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரமின்றிப் பராதீனப்படுத்தப்படுதலோ அல்லது வேறுவகையில் கையுதிர்க்கப்படுதலோ ஆகாது.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உறுப்பினர்களாகப் பதவிவகித்த நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டதாக விருத்தல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கூட்டுத்தாபனத்துக்குரித்தான நிதியம் மற்றும் அசைவுள்ள சொத்துக்கள் விடயமாக எந்தவொரு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், புதிய நிதியம் அமைத்தல், அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களை உரித்தாக்கிக்கொள்வதற்குத் தேவையான சட்டரீதியான நடைமுறைகளை மேற்கொள்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**6**. (*1*) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அத்தகைய விதிகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் முகாமைச்சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(*2*) கூட்டுத்தாபனத்தின் முகாமைச்சபை பிரதான தலைவர், இணைச்செயலாளர் இருவர், உப தலைவர் மூவர், பொருளாளர் ஒருவர், ஒழுங்கமைப்பாளர்கள் மூவர், கணக்காய்வாளர் ஒருவர் அத்துடன் கௌரவ பணிப்பாளரின் தற்றுணிபின்மீது முகாமைச் சபைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மூவர் உட்பட பதினான்கு பேர் அடங்குவர்.

(*3*) இப்பிரிவின் (*1*) ஆம் உட்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும் சங்கைக்குரிய மக்குளாவே விமல தேரர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆவார்.

(*4*) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் முகாமைச் சபையின் உறுப்பினர்களாகப் பதவிதாங்கியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர் பதிவேடு.

**7**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்த அனைத்து ஆட்களையும், அதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் ஒருவராக முறையாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து ஆட்களினது பெயர்கள் உள்ளிட்ட உறுப்பினர் பதிவேடொன்றைப் பேணுவதற்கு முகாமைச்சபை வழிவகுத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8**. (*1*) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதனதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இச்சட்டம் தேதிக்கு முற்போந்த தினத்தில் வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகள், கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதேபோன்ற கூட்டத்திலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் கணக்காலும் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) நிதியம் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

கணக்குகளும், கணக்காய்வும்.

**10**. (1) முகாமைச்சபையானது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட மற்றும் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்கள் பற்றியும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒருதடவையாவது பரிசீலனை செய்யப்படுதலும் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டுமென்பதுடன் வருமான செலவினக்கணக்கினதும் ஐந்தொகையினதும் செம்மை கூட்டுத்

தாபனத்தால் நியமிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினர் ஒருவரான கணக்காய்வாளர் ஒருவரால் அல்லது கணக்காய்வாளர்களினால் அத்தாட்சிப் படுத்தப்படுதலும் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்பட வுள்ளனவும் சங்கத்திற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**11.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று அபிவிருத்திச் சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத்தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று அபிவிருத்திச் சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாப னத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்க லாம்.*

**12.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதன மெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காவும் கூட்டுத்தாப னத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவு முள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுப் பணிப்பாளர், முகாமைச்சபையின் தலைவர் மற்றும் செயலாளர் அல்லது கூட்டுத்தாபனத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர் களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப் படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாதென்பதுடன் அத்தகைய ஆதனங்கள் அனைத்தும் மினிஒழுவ விதியாவாச பிரிவேன் விகாரைக்கு உரித்தாவதுடன் விகாரையின் வளர்ச்சிக்கும் பிரதம சங்கைக்குரிய தேரரினதும் பாவனைக்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும், மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தின் குறிப்பிடப் பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்